IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.14/2025

Deposition of Witness for P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.ஆதர்ஷ் |
| OCCUPATION | - | உதவி ஆய்வாளர், உச்சிப்புளி காவல் நிலையம், ராமநாதபுரம் மாவட்டம் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி காவல் நிலையத்தில், உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 21.07.2023 அன்று விருதம்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது காட்பாடி வட்டக் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காட்பாடி காந்தி நகரில் காங்கயநல்லூர் ரோட்டில் உள்ள சத்யா மேன்ஷன் லாட்ஜ் 5 பேர் கொண்ட கும்பல் கொள்ளை அடிக்க திட்டம் தீட்டிக் கொண்டு இருந்தார்கள் என்று தெரிந்து சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கணேசன், இளங்கோவன் காவலர்கள் சீமான், அல்தாப் பாஷா ஆகியோர்கள் மற்றும் காவல் ஆய்வாளருடன் மதியம் 14.00 மணிக்கு அங்கு சென்றோம். அங்கு இரண்டாவது மாடியில் ரூம் எண்.206 ல் 5 பேர் தங்கி இருந்தார்கள். அவர்களை ஆய்வாளர் விசாரிக்க அவர்கள் 1 ராஜா (எ) வசூல் ராஜா , 2 மன்சூர், 3 பாஷா, 4 சதீஷ், 5 மோகன் என்று கூறினார்கள். அவர்கள் மீது கொலை,

கொலை முயற்சி, ஆட்கடத்தல், வழிபறி போன்ற வழக்குகளில் பல முறை சிறை சென்றதாக சொன்னார்கள். 19.07.2023 அன்றிலிருந்து அந்த லாட்ஜில் தங்கியிருந்து வருவதாகவும் 21.07.2023 அன்று இரவு காங்கயநல்லூரிலுள்ள ஒயின் ஷாப்பில் கடை முடிய பின்பு கடையை உடைத்து அதிலிருக்கும் மதுபான பாட்டில்களை திருடி குடித்துவிட்டு இரவு ஆந்திராவிலிருந்து செம்மரக் கட்டை கடத்தி வரும் வாகனத்தை வழிமடக்கி டிரைவரை கத்தியால் தாக்கி உருட்டுக் கட்டையால் தாக்கி செம்மரக் கட்டை மற்றும் வாகனத்தை கொள்ளையடிக்க திட்டம் தீட்டியிருப்பதாக தெரிவித்தார்கள். ஆய்வாளர் அவர்களிடம் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அவர்களிடம் காரணம் கூறி எதிரிகளை 14.30 மணிக்கு கைது செய்து கைது செய்த விவரத்தை தெரிவித்து அவர்கள் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் கணேசன், இளங்கோவன் முன்னிலையில் 15.00 மணிக்கு ஆய்வாளர் பதிவு செய்து அவர்கள் 16.00 மணிக்கு ராஜா (எ) வசூல் ராஜா வெட்டுக் கத்தி மற்றும் அவரிடம் கார் TN-18-Q-5719 Silver Colour எடுத்து ஆஜர் செய்தார். அதை மகசரில் ஆய்வாளர் கைப்பற்றினார். மன்சூர் என்பவர் எடுத்து ஆஜர் செய்த கத்தியை 16.15 மணிக்கு கைப்பற்றதல் மகசரில் கைப்பற்றினார். பாஷா என்பவரிடமிருந்து உருட்டுக் கட்டை, சதீஷ் குமார் என்பவரிடமிருந்து உருட்டுக் கட்டை, மோகன் குமாரிடமிருந்து உருட்டுக் கட்டையை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். மாலை 17.15 மணிக்கு சம்பவயிடத்தை சாட்சிகள் ராமு, மகிமைராஜ் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார். பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு

சொத்தினை 18.00 மணிக்கு காவல் நிலையம் வந்து எதிரிகள் மீது விருதம்பட்டு குற்ற எண்.142/2023 இ.த.ச. பிரிவு 399 ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை-

21.07.2023 மதியம் 01.30 மணியளவில் நான் காவல் நிலையத்தில் இருந்தேன். சத்தியா லாட்ஜ் எங்களுடைய விருதம்பட்டு காவல் நிலைய எல்லைக்குள் வருகிறது. எதிரிகள் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றும் எதிரிகள் கொள்ளையடிக்க எந்தவிதமான திட்டத்தையும் தீட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. மன்சூர் அலியிடம் கைப்பற்றிய கத்தி என்னவிதமான கத்தி என்றால் கத்தியை கைப்பற்றினார்கள் என்னவிதமான தன்மை என்று தற்போது நினைவில்லை. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்தோம் என்றும் ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் சத்தியா லாட்ஜில் பணிபுரிபவர்களை என் முன்னிலையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரி.

4ம் எதிரி தரப்பில்- Assistant Legal Aid Defence Counsel குறுக்கு விசாரணை

21.07.2023 அன்று காங்கயநல்லூர் ஒயின் ஷாப்பை உடைத்து மது குடிக்கலாம் என திட்டம் தான் தீட்டினார்கள். எவ்வித பொருட்களையும் எடுக்கவில்லை. 4ம் எதிரியிடமிருந்து எவ்விதமான உருட்டுக் கட்டையும் மகசரில் கைப்பற்றப்படவில்லை என்றும் 4ம் எதிரியை சத்தியா லாட்ஜிடம் கைது செய்யவில்லை என்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல்

நிலையத்தில் தயார் செய்தோம் என்றும் புள்ளி விவர கணக்கிற்காக 4ம் எதிரி மீது பொய் வழக்கு ஆய்வாளர் தாக்கல் செய்ததற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 25.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.25 20:07:35 +0600

Additional District Judge(FTC),
Vellore